### "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து முகாமில் பெறப்பட்ட

# மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைந்து நடவடிக்கை எடுக்க துறை செயலாளர்களுக்கு அறிவுரை!

**சென்னை, செப். 14 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (13.09.2025) தலைமைச் செயலகத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், முகாமில் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், துறை வாரியாக பெறப்பட்ட மனுக்கள், அதன் மீதான தீர்வு மற்றும் நிலுவை விவரங்கள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்து, உரிய கால கட்டத்திற்குள் தீர்வு காணப்படுவதை கண்காணித்திடவும் துறை செயலாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அப்போது, இதுவரை நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் அரசின் 15 துறைகளில் பட்டியலிடப்பட்ட 46 சேவைகளில் வரப்பெற்ற 14,54,517 மனுக்களில், 7,23,482 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும், தீர்வு செய்யப்பட்ட மனுக்களில், 5,97,534 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், இது தீர்வுசெய்யப்பட்ட மனுக்களில் 83% ஆகும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், தகுதியுள்ள அனைத்து மனுக்களும் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், குறிப்பாக, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, ஆதி திரா விடர் நலத்துறை, எரிசக்தி துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை போன்ற முக்கியத் துறைகளின் மனுக்கள் மீது அதிக கவனம் செலுத்திட வேண்டும் என்றும், நகராட்சி நிர்வாகத் துறையில் சொத்து வரி, குடிநீர் தொடர்பான கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வேளாண்மைத் துறையில், விவசாய பெருமக்களின் தேவைகளான இடுபொருட்கள், விவசாய இயந்திரங்கள் தொடர்பான மனுக்களின் மீது அதிக கவனம் செலுத்தி, விவசாய பெருமக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என்றும், ரேஷன் கார்டுகளில் முகவரி மாற்றம் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டா சம்பந்தமான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அதேபோன்று, மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடர்பான கள ஆய்வுகளை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், முகாம்கள் நடைபெற்றபோது மக்கள் தெரிவித்த கருத்துகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். குறிப்பாக, தெருவிளக்கு, இணைப்பு சாலை, குடிநீர் போன்ற சமுதாய கோரிக்கைகள் தொடர்பான மனுக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை பொறுத்தவரை மக்கள் அளிக்கும் அனைத்து மனுக்கள் மீதும் விடுதலின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்காக அனைத்து அரசு துறைச் செயலாளர்களிடமும், மாவட்ட ஆட்சியர்களிடமும் தலைமைச் செயலாளர் அவர்கள் தொடர்ச்சியாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, பணிகளை ஒருங்கிணைத்து, மக்களின் மனுக்களுக்கு தீர்வு காணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட வழிகாட்டுதலின்படி, வீடு வீடாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியினை சிரத்தையுடன் கண்காணிக்கவும், பெறப்படும் மனுக்களின் மீது உரிய கால கெடுவிற்குள் சரியான தீர்வினை வழங்குவதை உறுதி செய்யவும், அனைத்து துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ஏ.வந்தேமாதரம் தலைமை!

#### படப்பை ஆ.மனோகரன் – கழகத்தினர் பங்கேற்பு!

## கோவூர் ஊராட்சி முன்னாள் தலைவர் ப.குமரவேல் - ஜலஜா குமரவேல் இல்ல விழா!

#### அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி - க.சுந்தர் எம்.எல்.ஏ. வாழ்த்து!

காஞ்சிபுரம், செப். 14

குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், கோவூர் ஊராட்சி முன்னாள் தலைவர் ப.குமரவேல் – ஜலஜா குமரவேல் ஆகியோரின் 50 வது ஆண்டு மணநாள் பொன் விழா மற்றும் சுந்தரவடிவேலு ரஞ்சனி ஆகியோரின் மகள் சு.பிரியாவின் மஞ்சள் நீராட்டு விழா இன்று (14.9.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 4 மணியளவில் தனலட்சுமி திருமண மண்டபம் கோவூரில் நடைபெறுகிறது.

விழாவிற்கு ஏ.வந்தே மாதரம் தலைமை வகிக்கின்றார். ப.சுதாகர், தா.அன்பழ கன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

ஆ செல்வராஜ், அ. கண்ணதாசன், பா. ராஜேந்திரன், தமிழரசி, சுரேஷ், கே.இ. சீனிவாசன், தமிழ்வாணன், வசந்தகுமார், தனசேகரன், ஜோஸ்பின், கிளாரா, அருள், மகாலட்சுமி, சரவணன், பாபு, சா.வெற்றிவேல், ஆர். பழனி, கே.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனத் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு எம்.பி., ஆர். எஸ். பாரதி, க.சுந்தர் எம்.எல்.ஏ., ஆகியோர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

இதில் படப்பை ஆ.மனோகரன், மீஞ்சூர் பாஸ்கர்சுந்தரம், சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஏ.மணி, கே.எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, வி. ஹரி, ஒன்றிய கழக நிர்வாகி கள் து.சுந்தர், பொன் ஜீவா, வசீகரன், பூங்கொடி, அரசு, ராஜா, தேசிங்கு, எஸ்.கே. துளசிங்கம், சந்தானம், தி.க. பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர். சாரதி, பெரியநாயகம், சையது சுலைமான் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

பூ.சுந்தரவடிவேலு, இரா.அன்பழகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

#### மு,க,தமிழரசு – நே, சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – நா,எழிலன் – சைதை சாதிக் பங்கேற்பு!

## ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள் கூட்டம்!

#### பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, செப்.14–

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்களும் மற்றும் துணை முதலமைச்சரும் மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் வட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று (14.09.2025 – ஞாயிற்றுகிழமை) காலை 11.00 மணி அளவில் புலியூர் 2வது சந்து, கோடம்பாக்கம், பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் புவி. பாலாஜி தலைமையில் வட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, முப்பெரும் விழா, கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

